4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு.**M**.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **33/2023** நாள்: **10.10.2025** வா.சா.**1** – நடராஜன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

நான் GD Finance என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்திற்கு நான் மட்டும் தான் உரிமையாளர். மேற்படி நிறுவனத்தை நான் பதிவு செய்துள்ளேன். மேற்படி பதிவிற்கான ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதியை நான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு ஓராண்டுக்கு முன்பு தெரியும். பிரதிவாதியின் மகளின் வியாபாரத்திற்காக என்னிடம் பணம் கேட்டு பிரதிவாதி என்னை அனுகினார் என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் பணமாக கேட்கவில்லை, கிரையமாக கொடுக்க தான் பணம் கேட்டார். நான் நிதி நிறுவனத்தின் பேரில் தான் ஒப்பந்தம் போட்டேன். 18.12.2018 ல் நான் கிரைய ஒப்பந்தம் போட்டேன். கிரைய ஒப்பந்தத்தின் போது ரூ.30 லட்சம் காசோலையாக பிரதிவாதிக்கு கொடுத்தேன். நான் கொடுத்த காசோலை கரூர் வைஸ்யா வங்கியின் காசோலை, அதன் எண்.000231 என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்திற்கான காலக்கெடு இரண்டு வருடம் என்று கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி காலக்கெடுவிற்கு பின்னிட்டு கிரைய ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த காலம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் கழித்து தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான், கொரோனா காலம் என்பதால் காலதாமதமாக அனுப்பினேன். உண்மையிலேயே நான் கிரையம் முடிப்பதற்கு கிரைய ஒப்பந்தம் போட்டிருந்தால், மேற்படி காலக்கெடுவிற்குள்ளேயே நான் கிரையத்தை முடித்திருப்பேன் என்றும், கடனுக்காக நான் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டிருந்த காரணத்தினால் தான்

மேற்படி காலக்கெடுவிற்குள் நான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் மீத கிரையத் தொகையை செலுத்துவதற்கு தயாராக மேற்படி காலக்கெடுவிற்குள் இருந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை, ஆனால் என் கைவசம் பணம் இருந்தது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் நான் எங்களுடைய நிறுவனத்திலிருந்து பிரதிவாதிக்கு ரூ.30 லட்சம் பணம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு ஒரு சான்றிதழ் வழங்கியுள்ளதாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 27.12.2018 ல் எங்கள் நிறுவன வங்கிகணக்கிலிருந்து பிரதிவாதிக்கு பணம் செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து 4.09 ஏக்கர் என்றால் சரிதான். மேற்படி சொத்து ரோட்டு ஓரத்தில் ஒரே செவ்வகமாக உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி வாங்கிய கடனுக்கு நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரதிவாதிக்கு சொந்தமான 4.79 ஏக்கரில் ஒரு பகுதியை கிரையமாகவும், ஒரு பகுதியை கிரைய ஒப்பந்தமாகவும் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. வாங்கிய கடனை பிரதிவாதி திரும்ப செலுத்தினால் கிரையத்தையும், கிரைய ஒப்பந்தத்தையும் ரத்து செய்து கொடுப்பதாக மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தும் போது நான் உறுதியளித்தேன் என்றால் சரியல்ல. 2019 ம் ஆண்டே பிரதிவாதி வாங்கிய கடனை என்னிடம் திரும்ப செலுத்தி விட்டார் என்றும், ஆனால் நான் கிரையத்தையும், கிரைய ஒப்பந்தத்தையும் ரத்து செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.10 17:39:48 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.